Registered as a Newspaper in Ceylon

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி கார்த்திகை 19 ஆம் நாள் றஜப் பிறை 29 (4-12-64) வெள்ளிக்கிழமை 295

விலை சதம் 10


நீடித்த பாவனைக்கு
சொனன்ஷீன் சொனன்ஷீன்
பற்றறிகளையே உபயோகியுங்கள்
வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள்:
துரை அன் கோ
23/3 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# பார்லிமெண்டை கலைத்து தேர்தலை நடத்த முடிவு!

## விசேஷ மந்திரிசபை கூட்டத்தில் தீர்மானம்

### மந்திரி சபை ராஜினமா பற்றி பிரதமர் இன்று கவர்னர் ஜெனரலுடன் பேச்சு நடத்துவார்

கொழும்பு, வெள்ளி (அதிகாலை 2 மணி)

**பார்லிமெண்டைக் கலைத்து பொதுத்தேர்தலை நடத்துவதென்று இன்று நடைபெற்ற மந்திரிசபையின் விசேஷ கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. பார்லிமெண்டைக் கலைப்பதற்குரிய திகதி உடனடியாக அறிவிக்கப்படவில்லை.**

நேற்று இரவு ஒன்பது மணிக்குக் கூடிய மந்திரிசபையின் விசேஷ கூட்டம் இன்று அதிகாலை ஒன்றரை மணி வரை நடைபெற்றது இந்தக் கூட்டத்துக்கு, ராஜினமா செய்த திரு சி பி டி சில்வாவைத்தவிர ஏனைய மந்திரிகள் எல்லோரும் வந்திருந்தனர்

இன்று வெள்ளிக்கிழமை காலை, பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, கவர்னர்ஜெனரல் திரு வில்லியம் கோபல்லாவைச் சந்தித்து பேச்சுக்கள் நடத்துவார் தமது மந்திரிசபையின் ராஜினமா எப்பொழுது சமர்ப்பிக்கப்படும் என்பது குறித்து பிரதமர் இன்று கவர்னர்ஜெனரலுடன் பேச்சுக்கள் நடத்துவார் எனத் தெரியவருகிறது

## சிறிமா அரசாங்கம் வீழ்ச்சி

கொழும்பு, வியாழன்

**திருமதி சிறிமா பண்டாரநாயகாவைப் பிரதம மந்திரியாகக் கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கம் ஒரு வாக்கினல் இன்று தோல்வியடைந்தது.**

சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணைமீதான வாக்கொடுப்பு இன்றிரவு 8 மணியளவில் நடைபெற்ற போது மந்திரி பதவியிலிருந்தும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்தும் இன்று காலை ராஜினமாச் செய்த திரு. சி. பி. டி. சில்வாவும் மற்றும் 13 எம். பி.க்களும் அரசாங்கத்தை எதிர்த்து வாக்களித்தனர். நியமன எம். பி. திரு. எஸ். தொண்டமான் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. மற்றொரு நியமன எம். பி. திரு. சில்கின்டன் சாமன் அரசாங்கத்துக்கு எதிராக வாக்களித்தார்.

சிம்மாசனப்பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணைக்கு ஆதரவாக 73 வாக்குகளும் எதிராக 74 வாக்குகளும் கிடைத்தன

வாக்கெடுப்பு முடிந்து அரசாங்கம் தோல்வியடைந்ததும் ராஜினமாச் செய்யுமாறு எதிர்க்கட்சியினர் கோஷமிட்டனர்.

நிதிமந்திரி டாக்டர் என். எம். பெரேரா சுகவீனமுற்று லண்டனில் இருக்கிறார். அவர் சபையிலிருந்திருந்தால் அரசாங்கம் பிழைத்திருக்குமென அரசியல் வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்தன.

### எதிர்த்து வாக்களித்தவர்கள் விபரம்

சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரே

(5-ம் பக்கம் பார்க்க)

தங்கக் கட்டிகள் கடத்தல் விசாரணை

## வல்வெட்டித்துறையைச் சேர்ந்த இருவர் சந்தேகத்தின்மீது கைது

கொழும்பு. வியா.

அண்மையில் 264 தங்கக் கட்டிகள் மறைந்தது சம்பந்தமாக, வல்வெட்டித்துறையிலுள்ள கள்ளக்கடத்தல் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் எனக் கருதப்படும் இருவரை இரகசியபொலிஸார் கைதுசெய்து கொழும்பு தலைமைக் காரியாலயத்திற்கு கொண்டுசென்றுள்ளார்கள்.

கள்ளக் கடத்தல் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் இருவரும் வல்வெட்டித்துறையிலேயே கைதுசெய்யப்பட்டனர்.

நவம்பர் 17-ம் திகதி அநுராதபுரத்தில் சோதனையிடப்பட்ட ஆடியின் கேம்பிரிட்ஜ் காரில் 288 தங்கக் கட்டிகளை இருந்தன. கைதுசெய்யப்பட்ட இருவரும் இரகசியப் பொலிஸாரிடம் கூறியதாக அறியப்படுகிறது.

தங்கக் கட்டிகள் மறைந்த சம்பவத்தைத் தொடர்ந்து ராஜாங்கனை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் இடமாற்றம் செய்யப்படவிருக்கிறார்களெனத் தெரியவருகிறது.

பொலிஸ் உயர்தர உத்தியோகத்தர் ஒருவரின் வங்கிக் கணக்கு, இரகசிய பொலிஸார் விசாரணையை ஆரம்பித்தபோது 3,000 ரூபாவிலிருந்து பின்னர் 1,500 ரூபாவாக எப்படிக் குறைந்தது என்பது பற்றியும், இரகசிய பொலிஸார் விசாரணை செய்துவருகிறார்கள் என்றும் அறியப்படுகிறது.

—

## தொண்டமான் மீது மந்திரி பாய்ச்சல்

நுவரேலியா, வியாழன்

'திரு. தொண்டமான் தமது சொந்த நலன்களிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறார். அவர் ஒருபிற்போக்குவாதி. அத்துடன் ஓர் ஏகாதிபத்தியவாதி.'

இவ்வாறு மந்திரி திரு. ஏ. பி. ஜெயசூரியா நுவரேலியா தொகுதியிலுள்ள வட்டகொட என்னுமிடத்தில் புதிதாகக்கட்டப்பட்டுள்ள பாடசாலை ஒன்றைத்திறந்து வைத்துப்பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. தொண்டமான் பார்லிமெண்டில் தெரிவித்த கருத்துக்கள் பற்றி கண்டனம் தெரிவிக்கையிலேயே மந்திரி மேற்கண்டவாறு கூறினர்.

## நாலரைலட்சம் மைலில் ரஷ்ய கிரகம்

மாஸ்கோ, டிச. 3

செவ்வாய்க் கிரகத்துக்கு ரஷ்யா அனுப்பிய ராக்கெட் நேற்றிரவு 4,41,000 மைல்கள் சென்றிருப்பதாய் மாஸ்கோவில் அறிவிக்கப்பட்டது.

அதனுடன் வானொலித்தொடர்புகள் சரியாக, இயங்குவதாயும், இதுவரை கானுகட லைவகள் செவ்வாய்க்கிரகத்துடன் தொடர்பு கொள்ளப்பட்டதாயும் மேலும் அறிவிக்கப்பட்டது.'

—

மலேஷியா

## இரகசிய சீன சங்கத்தினர் கைது

கோலாலம்பூர், டிச. 3

மலேசியாவில் நாசவேலையில் ஈடுபடுவதற்காக இரகசிய சீனர் சங்கங்களை இந்தோனேஷியா ஏற்பாடு செய்திருப்பதாய் அரசாங்கம் அறிவித்தது.



ராதா குரு பற்பொடி
பற்களை வெண்மையாக்கி, வாய் நாற்றத்தைப் போக்கி, பற்களுக்கு பூரணமான பாதுகாப்பளிக்கிறது. பல்வலி, பல்அரணை, முரசு கரைதல் முதலிய பல் சம்பந்தமான நோய்களுக்கு நிவாரணமளிக்கும்.
தயாரிப்பாளர்கள்: ராதா புறடக்ஸ்
எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

## மணிவாக்கு

நம்மைக் குணப்படுத்த நமது கைநாடியையே பார்த்துக்கொள்ள வேண்டும். ரஷ்யாவையோ அமெரிக்காவையோ அல்ல. மற்றவர்களைப்பார்த்து நடிப்பதை விட்டு, நமக்கான சொந்த முறையில் நமது நாட்டை அபிவிருத்தி செய்யவேண்டும்.

— ஜவஹர்லால் நேரு.


# ஈழநாடு

EELA NADU

EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna. Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு கார்த்திகை மீ 19 உ (4-12-64)


## யாழ்ப்பாண சந்தை

யாழ்ப்பாணத்தில் மாதிரிச் சந்தைக்கான கட்டட வேலைகளைத் தொடர்ந்து நடத்துவதென யாழ்ப்பாணம் மாநகரசபை தீர்மானித்துள்ளது. இது ஏகமனதாகச் செய்யப்பட்ட முடிவல்ல. மேயர் உள்ளிட்டு ஏழு அங்கத்தவர்கள் இத்தீர்மானத்தை ஆதரிக்கவில்லை.

யாழ்ப்பாணத்துக்கு ஒரு நவீன சந்தை அவசியம்தான். ஆனால் இதற்கான பணம் மாநகரசபையிடம் இருக்கிறதா? மாதிரிச் சந்தை கட்டுவதற்கு இரண்டு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சபையின் வரவு-செலவுத் திட்டத்திலோ ஒரு லட்சம் ரூபாய் துண்டு விழுகிறது. இந்நிலையில் சந்தை கட்டுவதற்கு இரண்டு லட்சம் ரூபாய் எங்கிருந்து கிடைக்கும்? சபையின் வருமானத்தை சந்தை கட்டுவதற்குச் செலவிட்டால் நகரின் இதர அபிவிருத்தி வேலைகளுக்கும் சுகாதாரம் போன்ற அத்தியாவசிய வேலைகளுக்கும் என்ன செய்வது? நகர வீதிகளின் நிலையோ கேருக்கே கனங்கத்தையேற்படுத்திக் கொண்டிருக்கிறது. சாக்கடைகள் இன்றி, நுளம்புத் தொல்லையும் தாங்க முடியாமலுள்ளது. சென்னையையே ஒரு கலக்குக் கலக்கிய டிங்கி ஜுரம் இங்கும் நுளம்பினால் பரவத் தொடங்கி விடுமோவென மக்கள் அஞ்சுகின்றனர். வீதிகளைச் சீர்திருத்தியும் வடிகால் வாய்கள் அமைத்தும் நகரைச் சீர்திருத்த வேண்டிய அவசியமான கடமை மாநகரசபையை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது. வீதிச் சீர்திருத்தத்துக்கும் வடிகால்வாய்கள் அமைப்பதற்கும் சபையிடம் பணமில்லாதிருக்கையில் மாதிரிச் சந்தைக்கான கட்டட வேலைகளை எப்படிச் செய்ய முடியும்?

சந்தை கட்டுவதற்கான பணத்தை அரசாங்கத்திடம் கடனாகப் பெற்றுக்கொள்ள இதுவரை முயற்சி செய்யப்பட்டதாகவும் தெரியவில்லை. அரசாங்கத்திடம் கடன்பெற்று அதனைக் கொண்டு சந்தை கட்ட முடிந்தால் தான் இந்த வேலை சாத்தியமாகும்.

புதிய பஸ் நிலையத்துக்காக 75,000 ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறதாம். அந்த இடத்திலேயே புதிய சந்தை அமைப்பதற்கான வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன. இதுவரை சந்தைக் கட்டடவேலைகளுக்கு 80,000 ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. ஆனாலும் சந்தைக் கட்டட அமைப்பு சம்பந்தமான படம் சரியான முறையில் இன்னும் வரையப்படவில்லையாம். என்ஜினியர்களின் ஆலோசனையும் பெறப்பட்டதாகத் தெரியவில்லை. சரியான படமும் இல்லாமல் பணமும் இல்லாமல் இந்த முக்கிய திட்டம் எவ்விதம் நிறைவேற முடியும் என்பது தெரியவில்லை.

இலே சமயம் நகரின் பஸ் நிலையப் பிரச்னை இன்னும் தீரவில்லை. பஸ் நிலைய மாற்றத்தினால் பொது மக்கள்படும் அல்லல் கொஞ்சமல்ல. பஸ் நிலையம் மீண்டும் மாற்றம்செய்யப்படக்கூடும். போக்குவரத்து மந்திரியே பஸ் நிலையம் மோசமான இடத்தில் அமைந்துள்ளது என்று தெரிவித்துள்ளார். பஸ் நிலையமாகவும் புதிய சந்தைக்கான வேலைகளாகவும் ஏற்கனவே மாநகரசபையின் ஒரு லட்சம் விழுங்கப்பட்டுள்ளது. இனியும் அவசரப்பட்டுக் காரியங்கள்செய்வதால் மேலும் பொதுமக்களின் பணம் வீணாகக்கூடும்.

சென்னை நகரின் ஜனநெருக்கத்தையும் இட நெருக்கடியையும் மனதில் கொண்டு தகுந்த ஆலோசனையின் பின் சமீபத்தில் மேயர் பதவியில் இருந்து விலகிய திரு. கிருஷ்ணமூர்த்தி புதிய பெரிய திட்டமொன்றைச் சமர்ப்பித்துள்ளார். யாழ்ப்பாண மாநகரசபையும் இன்றைய நிலையை மட்டும் கருத்தில் கொள்ளாது வருங்காலத்தையும் சிந்தித்து தகுந்த ஆலோசனையுடன் சிறந்த திட்டமொன்றை உருவாக்கவேண்டும். கோஷ்டி மனப்பான்மைக்கு இடம்கொடுக்காமல் நகரினதும் நகர மக்களினதும் பொது நலனைக் கருத்தில் கொண்டு மாநகரசபை ஒன்றுபட்டு அரசாங்க உதவி பெறமுடிந்தாலே யாழ்ப்பாண நகரம் முன்னேறமுடியும்.

## 'ஸ்கந்தா' கட்டுரையாசிரியர் வருத்தம் தெரிவித்தார்

கொழும்பு, வியாழன்

ஸ்கந்தா என்பது அலெக்சாந்தர் என்ற சொல்லின் திரிபு எனவும், அலெக்சாந்த மன்னர் மயில் ஆசனத்தில் ஆட்சிபுரிந்தார் என்றும் அவரையே இந்துக்கள் இப்பொழுது ஸ்கந்தா (முருகன்) எனக் கூறி வழிபடுகிறார்கள் எனவும் தான் அண்மையில் 'டெயிலி நியூஸ்' என்னும் ஆங்கிலப் பத்திரிகையில் குறிப்பிட்டதையிட்டு தான் வருந்துவதாகவும், இத் தவறை எடுத்துக்காட்டிய சேர் கந்தையா வைத்தியநாதனுக்கு தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாகவும் குறிப்பிட்ட கட்டுரையாசிரியர் திரு. எஸ். வி. ஓ. சோமநாதர் கட்டுரை வெளியான அதே பத்திரிகை மூலம் குறிப்பிட்டுள்ளார்.

எவரையும் புண்படுத்தும் நோக்கத்துடனோ, அல்லது வாசகர்களைக் கவரவேண்டும் என்ற நோக்குடனோதான் இதனை எழுதவில்லை எனவும் தனது ஆசிரிய நண்பர் ஒருவர் கொடுத்த தகவலை அது தனக்கு சந்தோஷத்தை கொடுத்தபோதிலும் அதி முரண்பாட்டை உண்டாக்கும் என அறியாமலே அதை எழுதியதாகவும் இவ்வித தவறு நேர்ந்துவிட்டதாகவும் திரு. சோமநாதர் தெரிவித்துள்ளார்

# சபையில் பணமில்லை; சரியானபடமும் இல்லை

## சந்தைகட்டுவது எப்படி?

### யாழ்ப்பாண மாநகரசபையில் நிகழ்ந்த சுவையான விவாதம்

யாழ்ப்பாணம், வியாழன்

"யாழ்ப்பாணம்மாதிரிசந்தை விஷயமாக எனது காணிபூமிகளை விற்று பிரிவிக்கவுள்சிக்கவரை வழக்கு நடத்தத் தீர்மானித்துள்ளேன்" என்று நேற்றுமாலை நடந்த மாநகர சபை விசேஷ கூட்டத்தில் மாதிரி சந்தைபற்றிய தீர்மானத்தின் மீது பேசுகையில் திரு. ஏ. ஜி. ராஜசூரியர் கூறினார்.

மேயர் எஸ். சி. மகாதேவா தலைமையில் நடந்த இவ் விசேஷ கூட்டத்தில் திரு. அந்தோனியைத் தவிர மற்றும் அங்கத்தவர்கள் யாவரும்பங்குபற்றினர்கள். திரு ஏ. துரைராஜசிங்கம் விவாதத்தில்பங்குபற்றியபோதும் வாக்களிப்பு நடைபெற்ற சமயம் சபையில் இருக்கவில்லை.

மாதிரிச்சந்தை அமைப்பது பற்றிய வழக்கறிஞரின் அறிக்கையும் கணக்காளரின் அறிக்கையும் அத்துடன் மத்திய அரசாங்கம் கடன் கொடுக்குமா என்பதைப்பற்றிய அறிக்கையும் கிடைத்தபின் இவ்விஷயம்பற்றி ஆலோசிக்க வேண்டுமென்று இச்சபை தீர்மானிக்கிறது என்ற 18-9-64-ம் திகதிய சபைத் தீர்மானத்தை நீக்க வேண்டுமென்ற பிரேரணையை திரு க. வீ. தெய்வேந்திரம் கொண்டு வந்தார் இப்பிரேரணையை திரு. பி எஸ் சேவியர் ஆமோதித்தார்

இத்தீர்மானம்பற்றி திரு. அல்பிரட் துரையப்பா பேசும் போது கூறியதாவது:

மாதிரிச் சந்தை கட்டுவதை நான் எதிர்க்கவில்லை. சட்டத்திற்கு விரோதமாகத் தீர்மானம் கொண்டுவந்தால் அதை எதிர்க்க வேண்டியது எனது கடமை. முன்பு கொண்டுவரப்பட்ட தீர்மானம் சந்தை கட்டட வேலைகளை தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டுமென்பதேயன்றி நிரந்தரமாக நிறுத்தி வைக்கும் தீர்மானமல்ல. அந்தத் தீர்மானத்தின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதால் இத்தீர்மானம் ஒழுங்கற்றது. இதுபற்றி வழக்கறிஞருக்கு எழுதியபோதே நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டது. வழக்கறிஞருக்கு நடவடிக்கை எடுக்கும்படி மேயர் எழுதியனுப்பினார். ஆதலால் நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டது.

மேயர்- அப்படியானால்புதிய சந்தை ஒருபோதும் கட்டி முடிக்க முடியாது.

துரையப்பா- நான் சந்தையைப்பற்றிப் பேசவில்லை. முந்தின தீர்மானத்தின்படி 3 அறிக்கைகளும் வந்த பின்பே கட்டலாம்.

மேயர்- அப்படியானால் அக் கட்டடம் கட்டப்படாது.

துரையப்பா- முன்பே அத் தீர்மானத்தை கொண்டுவந்திருக்கக்கூடாது.

கல்தான்- மாதிரிச் சந்தையைத் தொடர்ந்து கட்டவேண்டும். சட்டப் பிரச்னைக்கும் தீர்மானத்திற்கும் முரண் இல்லை.

துரையப்பா- இத் தீர்மானத்தில் மாதிரிச் சந்தை அமைப்பதுபற்றி என்றிருக்கிறது. ஆனால் ஏற்கனவே சந்தைக் கட்டடம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 3 அறிக்கைகளும் வராமல் மாதிரிச் சந்தைபற்றி ஆலோசிக்க முடியாது. நான் சந்தை கட்டுவதற்கு எதிர்ப்பில்லை. ஏன் அவசரம்? முன்பு இருந்த மேயர்கள் தவறு விட்டுவிட்டார்கள். இதுபற்றி நன்கு ஆலோசித்து முடிவு செய்யவேண்டும்.

ராஜசூரியர்- மக்களின் பணத்தில் எதற்காக மாதிரிச் சந்தை கட்டவேண்டும். அரசாங்கத்தில் கடன் எடுத்துத் கட்டவேண்டும். இச் சபையின் நிதி நிலைமை மிகவும் மோசம் என்று கணக்காளர் காட்டியுள்ளார்.

மேயர்- என் அபிப்பிராயத்தைத் தைரியமாக வெளியில் சொல்ல ஆயத்தமாக விருக்கிறேன்.

அபுசாலி- மக்களால் தெரிவு செய்யப்பட்டு வந்த நாங்கள் மக்களின் நன்மையைக் கருதி பணியாற்றவேண்டும். 11-ம் வட்டாரத்தில் உள்ள வாய்க்கால்களில் தண்ணீர் எதிராக ஓடுகிறது. (சபையில் சிரிப்பு) எதற்காக சிரிக்கிறீர்கள்? உங்களைச் சிரிப்பதற்கா மக்கள் இங்கு அனுப்பினார்கள். எல்லா விஷயத்தையும் சிரித்து சமாளித்துவிடலாம், ஆனால் அழ வேண்டிய காலமும் வரும். 14 வருடங்களாக இச் சபையின் நிதிநிலைமை திருப்தியில்லை. நுளம்புத்தொல்லை தாங்கமுடியாது. ஏழை மக்கள் சீரழிந்து வருகிறார்கள். ரோட்டுகள், மின்சாரம், தண்ணீர் வசதி எதுவும் சரியில்லை. அப்படிப்பட்ட நிலையில் சபையின் பணத்தில் சந்தை கட்டத்தான் வேண்டுமா?

நாசராசா- சபையின் நிதி (5-ம் பக்கம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

யாலும். சமயத்தின் பெயரால் ஏகாதிபத்திய வெறிகளை கிளப்ப இனியும் முடியுமா?

* * *

தமது சமயப் பிரசாரத்துக்காகப் போப்பாண்டவர் இந்த விஜயத்தை மேற்கொள்ளவில்லை என்றும், உலகிலே பல சமய மக்களிடையேயும் நல்லுறவு ஏற்படவும், பழைய வேற்றுமைத் தடைகளை நீக்கி பல சமயங்களிடையிலும் பரஸ்பர மதிப்பு ஏற்படுத்த வேண்டுமென்பதே வத்திகான் திருச்சபையினரின் புதிய நோக்கமென்றும் அமெரிக்க பத்திரிகையான "நியூயோர்க் ஹெரால்ட் டிரிபூன்" கூறி இந்த விஜயத்தை பாராட்டி தலையங்கம் எழுதியுள்ளது.

இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறைந்த பாவமும் குற்றமும் யூதர் இனத்தையே சாருமென்று வத்திக்கானின் ஒரு பழைய சட்டம் கூறியது. அதை இந்தப் போப்பாண்டவர் சமீபத்தில் நீக்கிவிட்டது பெரிய காரியம். இதை அரபு நாடுகளிலுள்ள கிறிஸ்தவர் எதிர்க்கின்றனராம். கிறிஸ்தவ ஒற்றுமையைக் கருதி இத் தடையை நீக்க வேண்டுமென்று கேட்பதற்கு பாப்பரசர் செவிசாய்க்கவில்லை.

மதங்களிடையே உயர்வு தாழ்வுகளைக் கற்பியாமலும் மதமாற்ற வேலைகளை நிறுத்தி வைத்தும் எல்லா சமயங்களுக்கிடையிலும் நல்லுறவு ஏற்படச் செய்யவும் போப்பாண்டவரின் இந்த விஜயம் உதவுமாயின் உலகத்துக்கே இது பெரிய நன்மையாகுமல்லவா?

* * *

மனைவன் காண் உடல் தனக்கோர் உயிரானான் காண்
உள்ளவன்காண் இல்லவன் காண் உடையாட்கொண்டான்,
தேனவன்காண் திருவவன் காண் திசையானான் காண்
தீர்த்தன்காண் பார்த்தனுடன் பணியைக் கண்ட,
கானவன் காண் கடலவன்காண் மலையானான் காண் களியானை ஈருரிவை
கதறப் போர்த்த, வானவன் காண் வானவர்கள் வணங்கி
யேத்தும் வலிவலத் தான்
காணவென் மனத்துளானே.

— அப்பர்சுவாமிகள்

## ஐயாறன் எழுதுவது

ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டொன்றாகும்... ஒன்றை நினையாது முன்வந்து நிற்பினும் நிற்கும் எனையாளும் ஈசனசெயல்.

ஒரே ஒரு வாக்கினால் அரசாங்கம் தோற்ற செய்தியை யாருமே எதிர்பார்க்கவில்லை. அசைக்க முடியாத மெஜாரிட்டி இருப்பதாக நினைத்தோம். ஆனால் திடீரென எதிர்பாராதது நடந்து விட்டது.

நேற்றிரவு வெகுநேரம் வரை "ஈழநாடு" ஆபீஸில் டெலிபோன் மணி அடித்துக்கொண்டே இருந்தது. "அரசாங்கம் தோற்றது உண்மைதானா?" "ஆமாம்" "சிவ சிவா, ஆரோ்சரா" இப்படித் தான் பலரும் கூறினர். இரவே விசேஷப்பதிப்பு வெளியிட்டுகூடச் கட இச்செய்தியை அறிவித்தோம்.

கவியோகி சுத்தானந்த பாரதியார் சென்ற புதனன்று கொழும்புக்கு வந்துசேர்ந்தாரென்ற செய்தியைப் பார்த்தும் நம்பமுடியவில்லை.

சென்ற மாதக் கடைசியிலேயே அவர் கொழும்பில் நடைபெற்ற சர்வ சமய மகாநாட்டுக்கு வருவதாக இருந்ததை ஆவ்றே குறிப்பிட்டிருந்தேன். அவர் அக்கூட்டத்துக்கு வரமுடியாதுபோனதும், சரி, நமது விசா அதிகாரதேவதைகள் வழக்கம்போல் தடுத்துவிட்டதாக நினைத்தேன். ஆனால் அவர் ரயில்மார்க்கமாக புதனன்று உண்மையில் இங்கு வந்துவிட்டாரென்ற தந்திச் செய்தியைக் கேட்டதும் வியப்பும், மகிழ்ச்சியும் அளித்தது.

இலங்கையில் ஆறு காட்களே தங்கியிருக்க விசா கிடைத்துளதாம். யாழ்ப்பாணத்துக்கும் அவரை அழைக்க இங்கிருந்து ஓரன்பர் கொழும்புக்குச் சென்றுள்ளார்.

இதை எழுதிக்கொண்டிருக்கையில் கொழும்பிலிருந்து ஒரு டெலிபோன் செய்தி கிடைத்தது. சுவாமி 6-ந் திகதியன்று இந்தியாவுக்கு அவசியம் திரும்ப வேண்டியுள்ளதாம். அதனால் யாழ்ப்பாணத்துக்கு வர முடியாதென்று ஓர் அன்பர் தெரிவித்தார். தனி புதிய அரசாங்கம் வந்தால் இந்த கெடுபிடி சட்டங்களெல்லாம் முடியுமானால், இந்தியா-இலங்கை பிரயாணம் சுலபமாகக்கூடும். என்ன நடக்கிறதோ பார்க்கலாம். நடப்பதெல்லாம் நன்மைக்குத்தானே!

* *

போப்பாண்டவர் பம்பாய்க்கு விஜயஞ்செய்த வைபவங்களை ஆகாசவாணியில் கேட்டேன். அங்கு கூடியிருந்த மக்களுக்கெல்லாம், அவர் பன்முறை கைகூப்பி 'நமஸ்தே' செய்தாராம். அவர் விசேஷச் செய்தியை வெளியிட்டு முடிவில் "ஜேய் ஹிந்த்" என்று உற்சாகத்துடன் கோஷித்தார். மக்களெல்லாரும் கரகோஷம் செய்து பெரும் மகிழ்ச்சி ஆரவாரங்கள் செய்தனர்.

முதலில் அவரது விஜயத்துக்கு இந்து மகாசபையைச் சேர்ந்த சிலர் எதிர்ப்புதெரிவித்தாலும், பின்னர் அவர்கள் எதிர்ப்பை வாபஸ்பெற்றுவிட்டதாக ஒரு செய்தியைப் பார்த்தேன். இந்துக்களை எல்லாம் மதம்மாற்றவே அவர் வருகிறாரோ என்று சந்தேகம் சந்தேகம் இப்போது தீர்ந்துவிட்டதுபோலும்.

கோவாவை "பறித்துக் கொண்ட" இந்தியாவுக்குப் போப்பாண்டவர் விஜயஞ்செய்யக்கூடாதென்று, கத்தோலிக்க நாடான போர்த்துக்கல் பலத்த ஆட்சேபம் எழுப்பியது. ஆனாலும் அவர் இதைப் பொருட்படுத்தவில்லை. இது, கோவா விஷயத்தில் இந்தியா எடுத்த நடவடிக்கை சரியானதென்றே அவர் மறைமுகமாக ஒப்புக்கொண்டதற்கு அறிகுறி

(4-ம் கலம் பார்க்க)

# அர்ஜன்டீனுவில் புகமுயன்ற முன்னுள் ஜனுதிபதி பெரோன்

## முயற்சி தோற்றதால் மீண்டும் ஸ்பெயினுக்குத் திரும்பினுர்

ரியோடிஜெனிரோ, டிச. 3

அர்ஜன்டீனுவுக்குத் திரும்ப முயன்ற முன்னுள் ஜனுதிபதி பெரோன், தமது முயற்சி தோல்வியுற்றதைத் தொடர்ந்து மீண்டும் மாட்ரிட் நகருக்குத் திரும்பினுர். அர்ஜன்டீனுவில் 1955-ம் ஆண்டு பெரோன் ஆட்சி வீழ்த்தப்பட்டது முதல், அவர் ஸ்பெயின் தலைநகரான மாட்ரிட்டில் அஞ்ஞாதவாசம் புரிந்துவருகிறுர்.

பெரோனின் விமானம் ரியோடி ஜெனிரோவில் இறங்கிய போது பிரேஸில் அதிகாரிகள் அதை அர்ஜன்டீனுவுக்குச் செல்ல அனுமதிக்க மறுத்ததுடன், ஆயுதக் காவலர்களுடன் அவரை அழைத்துச்சென்று விமானத்தில் ஏற்றி மாட்ரிட்டுக்குத் திரும்புமாறு உத்தரவிட்டனர்.

திரு. பெரோனின் நடவடிக்கை ஸ்பெயின் அதிகாரிகளுக்கு தர்மசங்கடத்தை விளைவித்திருப்பதாய் அறிவிக்கப்பட்டது. எனினும் அவர் மீண்டும் தஞ்சமபுக முயன்ருல் அதுபற்றி ஆலோசிக்கப்படும் என ஸ்பெயின் அதிகாரிகள் அறிவித்தனர்.

# 80,000 பேரைகிளர்ச்சிகாரர்கள் கொன்றனராம்

## 31 நாடுகளுக்கு ஜனுதிபதி கஸவுபு கடிதம்

லண்டன், டிச. 3

காங்கோவில் கிளர்ச்சிக்காரர்கள் வசமிருக்கும் ஐரோப்பியரை மீட்பதற்கு இனி அரசியல் நடவடிக்கைகளை கடைப்பிடிப்பதென்றும் ராணுவ நடவடிக்கையால் பயனில்லை என்றும் பிரிட்டனும், பெல்ஜியமும் இணக்கம் தெரிவித்திருக்கின்றன.

பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி திரு. கோர்டன் வாக்கரும் பெல்ஜிய வெளிநாட்டு மந்திரி திரு. ஹென்றி ஸ்பாக்கும் நேற்று லண்டனில் சந்தித்துப்பேசிய பின் இந்த உடன்பாடு ஏற்பட்டது.

கைதிகளாக இருப்பவர்கள் பல இடங்களில் சிதறி இருப்பது காரணமாக, ராணுவ நடவடிக்கை சாத்தியமில்லை எனக் கருதப்பட்டது.

இதற்கிடையில் காங்கோ ஜனுதிபதி கஸவுபு 31 ஆபிரிக்க நாடுகளுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கிளர்ச்சிக்காரர்கள் காங்கோவில் 80,000 பேரைப் படுகொலை செய்திருப்பதாய்த் தெரிவித்திருக்கிருர்.

அதே சமயம் காங்கோ கிளர்ச்சித் தலைவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் ஸ்டான்லி வில்லியில் தரை இறங்கிய எல்லா பெல்ஜிய பாரா துருப்புக்களும் அழிக்கப்பட்டதாயும், 26 அமெரிக்க விமானங்களும், ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன என்றும் அறிவித்திருக்கிருர்.

பாரிசிலிருக்கும் பிரதமர் ஷோம்பே, காங்கோ-சூடான் எல்லை மூடப்படும் எனக் கூறினுர்.

# ரஸ்க், குரோமிகோ 3 மணி நேரம் பேச்சு

## ஐ. நா. நிதி நெருக்கடி இன்னும் தீரவில்லை

நியூயோர்க், டிச 3

அமெரிக்க வெளிநாட்டு மந்திரி திரு. டீன் ரஸ்கும், ருஷ்ய வெளிநாட்டு மந்திரி திரு குரோமிகோவும் நேற்று மீண்டும் சந்தித்து மூன்று மணிநேரம் நடத்திய பேச்சுவார்த்தையில் ஐ. நா. சமாதானப் படைக்கு பணம் செலுத்துவது சம்பந்தமாக எவ்வித முடிவும் ஏற்படவில்லை. பேச்சுகள் உருப்படியாக இருந்தபோதிலும் முடிவு ஏற்படவில்லையென ரஸ்க் அறிவித்தார்.

இவ்விஷயமாக ஐ. நா. காரியதரிசி யுதாண்ட் இரு அங்கத்தினர்களுடன் பேச்சு நடத்தவேண்டுமென இரு மந்திரிகளும் இணக்கம் தெரிவித்தனர்.

இந்திய வெளிநாட்டு மந்திரி ஸ்வரன் ஸ்வரன்சிங் நேற்று யுதாண்டைச் சந்தித்து ஐ. நா. நிதி நெருக்கடி பற்றி ஆலோசனை நடத்தினுர்.

ஐ. நா. வின் இவ்விஷயமாக நெருக்கடியைத் தடுக்க யுதாண்ட் மேற்கொண்டிருக்கும் முயற்சியை அவர் பாராட்டினுர்.

திரு. ஸ்வரன்சிங் நேற்று கனேடிய வெளிநாட்டு மந்திரி திரு. பால் மார்ட்டினையும் சந்தித்தார். இன்று அமெரிக்க வெளிநாட்டு மந்திரி ரஸ்க்கைச் சந்தித்துப் பேசினுர்.

### பெல்லா மந்திரிசபை புனரமைப்பு

அல்ஜியர்ஸ், டிச. 3

அல்ஜீரிய அதிபர் பென்பெல்லா தமது மந்திரிசபையை திருத்தி அமைத்திருக்கிருர். தமது ஆதரவாளர்களை மட்டும் அவர் மந்திரி சபையில் வைத்துக்கொண்டிருக்கிருர். திரு. பென்பெல்லாவின் மந்திரிசபை இப்போது மூன்ருவது தடவையாகத் திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது.

### பீகிங் மறுப்பு

பீகிங், டிச. 3

ஜப்பானிய பிரதமர் திரு. ஸாட்டோவின் விசேஷப்பிரதிநிதியும், பார்லிமெண்ட் எம். பி.யுமான ஒருவருக்கு பீகிங் வர சீன அரசாங்கம் அனுமதி மறுத்துவிட்டது. பீகிங் மேயருக்கு ஜப்பான் செல்ல அனுமதி மறுக்கப்பட்டதே இதற்குக் காரணம் என அறிவிக்கப்பட்டது.

### உ. பி. யில் ஹிந்தி ஆட்சிமொழி

லக்னோ, டிச. 3

முடிவாக திடமான ஜனவரி 26-ம் திகதி முதல் உத்தர பிரதேசத்தில் ஹிந்தி ஆட்சிமொழியாகும் என முதன் மந்திரி ஸ்ரீமதி சுசேதா கிருபளானி அறிவித்தார். ஏற்கனவே இதே தினத்திலிருந்து மேற்கு வங்காளத்தில் வங்கமொழி ஆட்சிமொழியாகும் என அறிவிக்கப்பட்டது. [illegible]

### உலக பௌத்த மகாநாடு

சாரநாத், டிச. 3

அணு ஆயுத சோதனையையும் உற்பத்தியையும் நிறுத்த வேண்டும் என இங்கு கூடியுள்ள உலக பௌத்த மகாநாடு ஒரு தீர்மானத்தில் கோரியிருக்கிறது. வர்த்தக விளம்பரங்களில் புத்தரின் உருவத்தைக் காட்ட வேண்டாம் எனவும் அது மற்றோர் தீர்மானம் இயற்றியுளது.

### பாகிஸ்தான் குற்றச்சாட்டு

ராவல்பிண்டியா, டிச. 3

இந்தியாவிலிருந்து இதுவரை 4, 74, 000 இந்திய முஸ்லிம்கள் கிழக்கு பாகிஸ்தானுக்கு வெளியேற்றப்பட்டதாக பாகிஸ்தான் ரேடியோ கூறியது. அதே சமயம் காஷ்மீர் போர் நிறுத்த எல்லைக்கோடு நெடுகிலும் கனரக மேற்குநாட்டு ஆயுதங்களுடன், இந்தியத் துருப்புக்கள் குவிக்கப்பட்டு வருவதாயும் அது அறிவித்தது.

### ஜெர்மனிபற்றி ஐ. நா. தலைவர்

நியூயோர்க் டிச. 3

ஜெர்மன் பிரச்னை மிக அவசரமும், முக்கியத்துவமும் பொருந்தியதென்றும் இதைத் தீர்க்க விசேஷ கமிட்டி ஒன்று நிறுவவேண்டும் என்றும் ஐ. நா. பொதுச்சபையின் புதிய தலைவர் கூறினுர்.

### ஷேக் அப்துல்லா

ஸ்ரீநகர், டிச. 3

காஷ்மீர் பிரச்னையில் ஒரு தீர்வை உண்டாக்க முக்கியமாக இந்தியாவும் பாகிஸ்தானும் அமைதியில் பேச்சு நடத்தவேண்டுமென்றும், அமைதி நிலவவேண்டுமானுல் 17 வருடம் நீடித்துவரும் இப் பிரச்னை தீர்க்கப்படவேண்டுமென்றும் ஷேக் அப்துல்லா கூறியிருக்கிருர்.

### 2 நிருபர்கள் வெளியேற்றம்

நைரோபி, டிச. 3

கென்யா அரசாங்கம் இரு பிரிட்டிஷ் நிருபர்களை நாட்டை விட்டுச் செல்லுமாறு உத்தரவிட்டிருக்கிறது.

### சென்னையில் இலங்கை கோஷ்டி

சென்னை, டிச. 3

இந்தியாவில் 6 வார காலம் சுற்றுப்பிரயாணம் செய்யவிருக்கும் இலங்கை கிரிக்கெட் கோஷ்டி நேற்று சென்னை வந்து சேர்ந்தது.

# பாப்பரசருக்கு ராமாயணம், மகாபாரதம் அன்பளிப்பு

## ஜனுதிபதியைச் சந்தித்தார்

பம்பாய், டிச. 3

நேற்று பம்பாய் வந்து சேர்ந்த பரிசுத்த பாப்பரசரை உப ஜனுதிபதி டாக்டர் ஸாகிர் ஹுசெய்ன், ஸ்ரீமதி இந்திரா காந்தி, மகாராஷ்டிர கவர்னர் திரு. செரியன், முதன் மந்திரி திரு. நாய்க் மேயர், ஸ்ரீமதி பண்டிட் ஆகியோரும் மற்றும் பல தலைவர்களும் சந்தித்தனர்.

உப ஜனுதிபதி டாக்டர் ஹுசெய்ன், பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரி ஆகியோருடன் அவர் தனித்தனியாகச் சம்பாஷணை நடத்தினுர். தன்னைச்சந்திப்பதற்காக பாப்பரசர் சகல தலைவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

ஆசிய மக்களுக்குத் தம் வாழ்த்துக்களைக்கொண்டு வந்திருப்பதாயும், சமாதானத்திற்காக இந்தியா மேற்கொள்ளும் முயற்சிகளைத் தாம் பாராட்டுவதாயும் பாப்பரசர் கூறினுர்.

ராஜாஜி எழுதிய ராமாயணம், மகாபாரதம் ஆகிய நூல்கள் பேரப்பாண்டவருக்கு அன்பளிப்பு செய்யப்பட்டன.

நேற்று பாப்பரசரை பம்பாயில் 20 லட்சம் மக்கள் 14 மைல் பாதை நெடுகிலும் வரவேற்றனர். அவர் நேற்று கலந்துகொண்ட ஒரு நிகழ்ச்சியில் "ஜெய் ஹிந்த்" என்று வாழ்த்துக் கூறினுர்.

பாப்பரசரைச் சந்திக்கும் பொருட்டு ஜனுதிபதி ராதாகிருஷ்ணன் இன்று புதுடில்லியிலிருந்து பம்பாய்க்கு வந்து சேர்ந்தார். கவர்னர் மாளிகை ராஜ்பவனில் பாப்பரசர், ஜனுதிபதியைச் சந்தித்தார்.

# சாஸ்திரி லண்டன் சென்ருர்; 3 நாள் பிரிட்டிஷ் விஜயம்

பம்பாய், டிச. 3

இந்தியப் பிரதமமந்திரி திரு லால்பகதூர்சாஸ்திரி நேற்று நள்ளிரவு பம்பாயிலிருந்து லண்டன் புறப்பட்டார். இன்று பிற்பகல் லண்டன் வரும் சாஸ்திரி பிரிட்டனில் 3 நாள் உத்தியோக விஜயத்தை மேற்கொள்கிருர்.

தன் வாழ்நாளில் முதல் தடவையாக ஐரோப்பிய நாடு ஒன்றிற்குச் செல்லும் சாஸ்திரி பிரிட்டிஷ் பிரதமமந்திரி திரு வில்சனையும், இதர சிரேஷ்ட மந்திரிகளையும் சந்திப்பார். எதிர்க்கட்சித் தலைவர் சர் அலெக் டக்ளஸ்ஹியூம் சாஸ்திரியைச் சந்திப்பார் என அறிவிக்கப்படுகிறது.

திரு. சாஸ்திரியை எலிஸபெத் மகாராணி பக்கிங்ஹாம் அரண்மனையில் வரவேற்பார்.

பம்பாய் விமானநிலையத்தில் இந்தியப் பிரதமரை உப ஜனுதிபதி டாக்டர் ஹுசெய்ன், ஸ்ரீமதி இந்திரா காந்தி, மகாராஷ்டிர கவர்னர், முதன் மந்திரி, பம்பாய் மேயர் ஆகியோர் வழி அனுப்பி வைத்தனர்.

பிரிட்டிஷ் மந்திரிகளுடன் பரஸ்பர இரு நாடுகளின் நலன்கள் பற்றியும் சமாதானம் [illegible] பல [illegible] பிரச்சினைகள் [illegible] கூறினுர். சீன அணு சோதனை, இந்தியா—பாகிஸ்தான் உறவு ஆகிய விஷயங்களும் பேச்சுவார்த்தையில் இடம்பெறும் என அவர் தெரிவித்தார்.

### போப் விழா பாதுகாப்பு

பம்பாய், டிச. 3

போப்பாண்டவர் விஜயத்தை முன்னிட்டு [illegible] 2500 போலீசார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டனர். ஏற்கனவே நகரில் 16,000 பேர் [illegible] பொலிஸ் படையில் [illegible] மேற்பட்டவர் [illegible] மகாநாட்டில் [illegible] கடமையாற்றி [illegible]

"இந்தியாவும் [illegible] சுபிட்சமாய் இருக்கட்டும்" என பம்பாயிலும் சாரநாத்திலும் நடைபெறும் கத்தோலிக்க, பௌத்த மகாநாடுகள் குறித்து தலாய்லாமா கூறினுர்.

### வர்த்தக பேச்சு முறிவு

ஸாலிஸ்பரி, டிச. 3

தென் ரொடீஷியாவுக்கும் ஸாம்பியாவுக்குமிடையே இங்கு நடைபெற்ற வர்த்தக பேச்சுவார்த்தைகள் முறிந்து விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

# நாளொன்றுக்கு 12000 கார்கள் உற்பத்தி

## ஜெர்மனியின் சாதனை

பிராங்க்பர்ட், டிச. 3

மேற்கு ஜெர்மனியில் இந்த ஆண்டில் இதுவரையில் சுமார் 30 லட்சம் கார்கள் உற்பத்தியாகி இருக்கின்றன. நாளொன்றுக்கு சராசரி உற்பத்தியாகும் 13,000 [illegible] வரிசையாக நிறுத்தி வைத்தால் அவற்றின் மொத்த நீளம் 30முதல் 35 மைல் அளவுக்கு வரும். ஜெர்மனியின் இவ்வளவு கார்கள் [illegible] நிலை அதிகரித்தும் உள்நாட்டிலேயே விற்பனையாகிவிட்டன. இவற்றில் [illegible] அதிகமான கார்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன.

ஜெர்மனியில் ஏழுபேருக்கு ஒரு கார் வீதம் இருக்கிறது. எனினும், இது பிரான்ஸிலும், இங்கிலாந்திலும் உள்ள கார்களின் [illegible] குறைவு தான். பிரான்ஸில் 6 பேருக்கு ஒரு கார் வீதமும் இங்கிலாந்தில் 6 பேருக்கு ஒரு கார் வீதமும் இருக்கின்றன.

இந்த ஆண்டில் மட்டும் ஜெர்மனியில் 14 லட்சம் கார்கள் விற்பனையாகுமெனவும், அதே சமயத்தில் 1 20,000 கார்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் எனவும், எதிர்பார்க்கப்படுகிறது. ஜெர்மனியர்கள் புதிது [illegible] கார்கள் வாங்க [illegible]. இவர்களில் [illegible] 3 90,000 கார் [illegible] பழைய [illegible]

சென்ற ஆண்டு மேற்கு ஜெர்மனியில் 26 *7 910 கார்கள் உற்பத்தியாயின. [illegible] முந்திய ஆண்டு உற்பத்தியைக் காட்டிலும் [illegible] 13 சதவீதம் அதிகமாகும். ஏற்றுமதியான கார்களின் எண்ணிக்கை 9,51,200, கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டிலும் மொத்தக்கார் உற்பத்தியில் 51சதவீதம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. கார்களை பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில் உலகிலேயே மேற்கு ஜெர்மனி தான் முதலிடம் வகிக்கிறது. பிரயாணிகளுக்கான கார்களை உற்பத்தி செய்வதில் ஜெர்மனிக்கே முதலிடம். எல்லா வகைக் கார்களையும் தயாரிப்பதில் அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தை ஜெர்மனி பெற்றிருக்கிறது.

## "ரயில் சேவையை மீண்டும் ஆரம்பிக்குக"

கல்லூர், வியாழன்

போக்குவரத்து அமைச்சர் திரு. அனில் முனசிங்காவிடம் காங்கேசன்துறையிலிருந்து புறப்படும் உத்தரதேவிக்கு முன் சேவை செய்த புகையிரதத்தை மீண்டும் சேவையில் ஈடுபடுத்தும்படி தெல்லிப்பழைத் தமிழரசுக்கட்சிக் கிளை கோரியுள்ளது.

அதிகாலை 5 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து புறப்படும் "ரயில்கார்" புகையிரத சேவை புதிய ரயில்வே நேர அட்டவணையின்படி நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் மாவிட்டபுரம், தெல்லிப்பழை, மல்லாகம் ஆகிய இடங்களிலுள்ள பிரயாணிகள் பெரும் அவதிக்குள்ளாவதாகவும் அமைச்சருக்குச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. 'சீசன்' டிக்கட் வைத்திருப்பவர்கள் பல கஷ்டங்களுக்கிடையே உத்தரதேவியைப் பிடிக்கவேண்டியிருப்பதாகவும் கூறப்படுகிறது. பிரயாணிகளுக்கு வசதியளிக்கும் வகையில் நிறுத்தப்பட்ட புகையிரதசேவையை உடன் மீண்டும் ஆரம்பிக்கும்படி மந்திரியிடம் கோரப்பட்டுள்ளது.

இப் புகையிரத சேவை நிறுத்தப்பட்டதற்கு பிரயாணிகள் குறைவாகவே இருந்ததுதான் சேவை நிறுத்தப்பட்டதற்குக் காரணமென புகையிரதப்பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## மலேரியா பரவுகிறது!

கொழும்பு, வியாழன்

நாட்டில் மீண்டும் மலேரியா பரவிவருவதற்கான அறிகுறிகள் காணப்பட்டுள்ளன. கலவிலபத்தான, புலுகசவீவ ஆகிய பின்தங்கிய கிராமங்களில் 15 பேருக்கு மலேரியா காணப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மலேரியா பரவாமல் தடுப்பதற்கு சுகாதார இலாகா இப்போது தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

## ராஜரத்தினவின் கண்டனம்

பண்டாரவளை, வியாழன்

"சிறிமா பட்டாரநாயக்கா அரசாங்கமும் அவரது கூட்டரசாங்க பங்காளரும் இலங்கை மக்களுக்கு துரோகம் செய்துவிட்டார்கள். சரித்திரத்தில் துரோகிகள் வரிசையின் இவர்களது பெயர் இடம்பெறும்."


இவ்வாறு வெலிமடை எம். பி. திரு. கே. எம். பி. ராஜரத்தின தமது கட்சியின் வருடாந்தக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

சமீபத்தில் செய்துகொண்ட இலங்கை-இந்திய ஒப்பந்தம் சம்பந்தமாகப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த ஒப்பந்தம் சிங்கள மக்களுக்கு பெருந்த அபாயம் விளைவிக்கக்கூடியதென்றும் இதனால் சிங்கள மக்கள் படிப்படியாக சிறுபான்மையின மக்களாக்கப்படுவார்களென்றும் திரு. ராஜரத்தின மேலும் பேசுகையில் தெரிவித்தார்.


ஒரு பிரபலமான டுப்பிளிகேட்டரின் பிரபலமான மொடல் சகாயமானவிலைக்கு உண்டு

REX-ROTARY



எம்2 — விசேஷ அம்சங்கள்

காகிதங்கள் வைக்கும் பெட்டியில் 250 காகிதங்கள் கொள்ளலாம். நபால் அட்டையிலிருந்து முழு அளவுக் காகிதம் வரையான எந்த அளவுள்ள காகிதத்திலும் பிரதிகள் எடுக்கலாம்.

உயரம், ஓரம் ஆகிய நிர்ணயங்களை இலகுவில் செய்யலாம். விரும்பிய விதத்தில் ஒழுங்கு செய்யக்கூடியது. ஸ்டென்சில் வெட்டுகள் செய்யக் கூடிய வகையில் சரி செய்யலாம்.

கௌண்டரில் நான்கு இலக்கங்கள் உண்டு. விரும்பினால், ஒற்றைக் கணக்கை மாற்றி சைபர் ஆக்கக்கூடிய வசதியும் செய்யப்பட்டுள்ளது. இது எடுக்கும் பிரதிகளின் எண்ணிக்கையைச் சரியாகக்கணக்கிடுகிறது. இயந்திரம் இயங்காதிருக்கும்போது கிராங்கின் சுழற்சிமுறை மாற்றுப் பொறி சுழற்சி எண்ணிக்கைகளை இது கணக்கிடுவதில்லை.

இத்தனை சிறப்பு வாய்ந்த அம்சங்களுடன் கூடிய எம்—2 இன் விலை குறைவானதே. பாவிக்கும்போதும் அதிக செலவு ஏற்படுவதில்லை. இதனால்தான் எம்—2 இன் விலைக்கு அது விரைவில் நல்ல சேவைபுரிகிறது.

எம்—2 பற்றிய இன்னும் அதிகம் கூறலாம். உங்களுக்குக் கஷ்டமின்றி எவ்வளவுதூரம் அது சேவை செய்யும் என்பதை நீங்கள் அறிய வேண்டும். தொலைபேசி மூலம் அல்லது கடிதம் மூலம் எம்முடன் தொடர்புகொண்டால், எம்—2 வேலை செய்யும் விதத்தை உங்களுக்கு உங்கள் காரியாலயத்திலேயே காண்பிப்பதில் மகிழ்ச்சியடைவோம்.

விரைவில் இறக்குமதி செய்யப்படவிருக்கிறது.

ஆபீஸ் இக்கியுப்மெண்ட் லிமிட்டெட்
(OFFICE EQUIPMENT LTD.)

ஐலண்ட் கட்டிடம், கொழும்பு—3.

தொலைபேசி: 6168
தந்தி: ஆபீஸ்எகிட்ஸ்


# இவருக்கு இந்த அதிகாரத்தை யார் கொடுத்தார்?

## விஜயசிங்கத்தின்கோரிக்கைக்கும் சங்கத்துக்கும் சம்பந்தமில்லை என்கிறார் காரியதரிசி

கொழும்பு, வியாழன்

"பொதுச்சேவை எழுதுவினைஞர் சங்கம் பௌத்தத்தை அரசாங்க மதமாக்க வேண்டுமென்ற விஷயத்தில் எதுவித நாட்டமோ அக்கறையோ கிடையாது. உதவிச் செயலாளரான திரு. விஜயசிங்கத்தை இதுபற்றி திரு. செல்வநாயகத்தின் ஆதரவு கோரி கடிதம் எழுதுமாறு அதிகாரமெதுவும் வழங்கப்படவில்லை. எனவே திரு. வி. விஜயசிங்கம் எழுதிய கடிதத்துக்கும், சங்கத்துக்கும் எதுவித சம்பந்தமுமில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்" என பொதுச்சேவை எழுதுவினைஞர் சங்க பொதுச்செயலாளர் திரு. அசோகா ஹெரத், திரு. விஜயசிங்கம் அண்மையில் தமிழரசுக்கட்சித் தலைவருக்கு கடிதம் எழுதியது சம்பந்தமாக பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தமிழரசுத் தலைவருக்கு பௌத்த மதத்தை அரசாங்க மதமாக்குவதற்கு ஆதரவு கொடுக்குமாறு கடிதம் எழுதுமாறு உதவிச் செயலாளருக்கு யார் இந்த அதிகாரத்தைக் கொடுத்தார்கள்? சங்கம் எவ்வித அதிகாரமும் அளிக்கவில்லை. திரு. விஜயசிங்கத்தின் இச்செய்கைக்கும், சங்கத்திற்கும் எதுவித தொடர்புமில்லை.

பௌத்த மதத்தை அரசாங்க மதமாக்குவதற்கு ஆதரவு கொடுக்குமாறு பொதுச் சேவை எழுதுவினைஞர் சங்க உப செயலாளர் என்ற ரீதியில் தான் கேட்டுக்கொள்வதாக திரு. விஜயசிங்கம் தமிழரசுக் கட்சித் தலைவருக்கு எழுதிய கடிதமொன்றில் குறிப்பிட்டிருந்தார். இதைக் கண்டித்து அரசாங்க எழுதுவினைஞர் சங்கக் காரியதரிசி அறிக்கை விடுத்திருந்தார்.

இந்தக் கண்டன அறிக்கை குறித்து திரு. விஜயசிங்கம் தெரிவித்துள்ளதாவது:

"இதுவிஷயமாக அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்துடன் நான் முரண்பாடு தெரிவிக்க விரும்பவில்லை. தமிழரசுக் கட்சித் தலைவருக்கு நான் கடிதம் எழுதினேன். அவரிடமிருந்து நான் பதிலை எதிர்பார்க்கின்றேன். இக்சமயத்திற்கூட ஐக்கிய இலங்கையை உருவாக்கும்பொருட்டு சிங்களவர்-தமிழர் ஒற்றுமையை அவர் விரும்புவாரென்றே நான் நம்புகிறேன்."

## "கட்சிகள் காளான்களல்ல!"

அக்கரைப்பற்று, வியா.

'தேநீர்விருந்து வைப்பது போல் அவ்வளவு சுலபமாக அரசியல் கட்சிகளைத் தோற்றுவித்துவிட முடியாது. அரசியல் கட்சி என்பது ஒரு சாதாரண விஷயமல்ல' என முன்னாள் பாதுகாப்பு வெளிவிவகார உதவிமந்திரி திரு. வி. நல்லையா குறிப்பிட்டார்.

கிளிநொச்சி எம். பி. யால் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய கட்சி பற்றியும் தமிழரசுக்கட்சியின் நோக்கம்பற்றியும் குறிப்பிட்டுப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. நல்லையா மேலும் பேசுகையில் தமிழ்இனம் மிக்க புத்திசாலித்தனமான இனம், ஆனால் அரசியல் துறையில் தமிழ் சமூகம் தலைவர்களும் தோல்விகண்டுள்ளார்கள் என்றார்.

திரு. நல்லையா தாம், ஒரு புதுக்கட்சியை அமைக்கப்போவதாக பரவிவரும் வதந்தியை மறுத்துப் பேசுகையில் தமக்கு அவ்வித நோக்கமில்லையென்று தெரிவித்தார்.

## செய்திச் சுருக்கம்

கிழக்கு மாகாண கூட்டுறவு யூனியன் கட்டிடத்தை அழித்து புதிய கட்டடம் ஒன்றைக் கட்டுவதை மட்டக்களப்பு முதலாவது எம். பி. திரு. செ. இராசதுரை எதிர்த்துள்ளார்.

∴ ∴ ∴

வெளிநாடு செல்லும் யாத்திரிகர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கக்கோரும் தீர்மானம் ஒன்று திருமலை நகரசபைக் கூட்டத்தில் நிறைவேறியது.

∴ ∴ ∴

வெங்காயத் தட்டுப்பாட்டை நீக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. 800 தொன் பம்பாய் வெங்காயம் இறக்குமதி செய்யப்படுகிறது. சின்ன வெங்காயத் தட்டுப்பாடு ஜனவரி வரை நீடிக்கலாம்.

∴ ∴ ∴

திருக்கேதீச்சரத்தில் நடந்த இரண்டாம் சோம வார விழாவில் இராணுவத் தளபதி கேணல் உடுகம கலந்துகொண்டார்.

∴ ∴ ∴

பண்டாரவளை சென்மேரிஸ் தமிழ் பாடசாலை மிகவிரைவில் மகா வித்தியாலயத்தின் அந்தஸ்துக்கு உயர்த்தப்படும் என்றும் இதற்கு வேண்டிய நடவடிக்கைகளைத் தாம் முன்னின்று செய்யப் போவதாகவும் பண்டாரவளை எம். பி. திரு. ஜே ஜி. குணசேகரா அறிவித்தார்.

∴ ∴ ∴

அண்மையில் திருக்கோணமலைக்கு விஜயம் செய்த உதவி மந்திரி திரு. மதன்னக்கூல் அபயபுரத்தின் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வாலிப முன்னணியொன்றை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

∴ ∴ ∴

வாழ்க்கைச் செலவு உயர்வைத் தடுப்பதற்கு சுதந்திரக் கட்சி அரசாங்கத்திற்கோ சமசமாஜக் கூட்டரசாங்கத்துக்கோ சக்தியில்லை என்று திரு பாலதம்பு கூறினார்.

## சோவியத் மந்திரி மரணம்

மாஸ்கோ, டிச. 3

சோவியத் வெளி விவகார துணை மந்திரி திரு. சோபலோவ் புற்றுநோய் காரணமாக நேற்று மாஸ்கோவில் காலமானார். அவருக்கு வயது 61.

## கியூபாவும் சேரும்

நியூயோர்க், டிச 3

சீனாவை ஐ. நா. வில் சேர்க்க வேண்டும் என்ற தீர்மானத்தை கம்போடியாவுடன் சேர்ந்து கியூபாவும் பிரேரிக்கும் என அறிவிக்கப்பட்டது.

## ஸிரியா — இஸ்ரேல் கைகலப்பு

நியூயோர்க், டிச. 3

ஸிரியா—இஸ்ரேல் தகராறு பற்றி ஐ. நா. பாதுகாப்புசபை விவாதிக்க இருக்கிறது. நேற்று எல்லையில் இரு நாடுகளுக்குமிடையே மீண்டும் கைகலப்பு ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

## திரு. கபூர் கொழும்பு திரும்பினார்

கொழும்பு, வியாழன்

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை அமுல் நடத்துவது சம்பந்தமாக இந்திய அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்த புதுடில்லி சென்ற இந்தியத் தூதர் திரு. பி. கே. கபூர் ஒரு வார காலம் அங்குள்ள அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்திய பின்னர் நேற்று கொழும்பு திரும்பினார்.

திரு. கபூர் இம் மாதம் 24-ம் திகதி மாற்றலாகிச் செல்கிறார். புதிய தூதர் திரு. பிம்ஷென் சாகார் இம் மாத இறுதியில் கொழும்பு வந்து சேருவார்.

## அரசாங்கத்தின்மீது பிக்குதாக்குதல்

மாவில, வியாழன்

கூட்டரசாங்கத்திலுள்ள மார்க்ஸிஸவாதிகள் மகாசங்கத்தின் ஒற்றுமையைக்குலைக்க முயற்சித்துவருகிறார்களென்றும் தமது சுதந்திரத்தையும்பௌத்தத்தையும் பாதுகாக்க பௌத்தகுரு பீடத்திலுள்ளவர்கள் உயிரைத்தியாகம் செய்யவும் தயாராக இருக்கிறார்களென்றும் வண. பலுவெலகே ஸ்ரீ சரணபால தேரோ மாவிலவில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்.

பத்திரிகைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்வதை ஆட்சேபிக்குமுகமாக நடத்தப்பட்ட கூட்டத்தில் பேசுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அரசாங்கத்தில் ஊழல் மலிந்துவிட்டதாகவும் லஞ்சக்குற்றங்கள் அதிகரித்து விட்டதாகவும் தெரிவித்த அவர், பத்திரிகை மசோதாவை முன்வைத்து அரசாங்கம் பொதுத் தேர்தல் நடத்துமா என சவால் விடுத்தார்.

## சமயப் பிரசாரங்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

அகில இலங்கைப் பொதுசன சேவைச் சங்க சமயப் பிரசாரசபையினரால் நல்லூர் தேவஸ்தான சண்முக தீர்த்த மண்டபத்தில் அதன் தலைவர் ஸ்ரீமத் சி.எஸ். எஸ். மணிபாகவதர் தலைமையில் இன்று மாலை 6-45மணி முதல் 8 மணிவரை சமயப் பிரசாரகர் திரு வே. கந்தையா "மாணிக்கவாசகர் அடைந்த இலட்சியம் செய்யப்பட்ட இலட்சியங்கள்" என்னும் பொருள்பற்றியும், வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் மாலை 6 மணி முதல் 7 மணிவரை ஆசிரியர் திரு. வி. கே. ஆறுமுகம் "சோமவாரம்" என்னும் பொருள் பற்றியும், நாயன்மார்க்கட்டு ஸ்ரீராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் ஆசிரியர் திரு. ச. மயில்வாகனம் "திருவெம்பாவையும் திருவாதிரை" என்னும் பொருள் பற்றியும் நல்லூர்கிழக்கு மூத்தவிநாயகர் ஆலயத்தில் பண்டிதர் இரா.சிவசுப்பிரமணியம் "திருவெம்பாவை" என்னும் பொருள் பற்றியும் பிரசங்கங்கள் நிகழ்த்துவார்கள்.

திங்கட்கிழமை நல்லூர் சிவன் தேவஸ்தானத்தில் கணேசசுந்தரம் மாலை 6-30 மணிமுதல் 8 மணிவரை "கண்ணப்ப நாயனார்" என்னும் பொருள்பற்றி பக்கவாத்தியங்களுடன் வில்லுப்பாட்டு நடத்துவார்.

## மீண்டும் தலைவராகத் தெரிவு

பருத்தித்துறை, வியாழன்

புலோலி கிராமசபையின் தலைவர் திரு. செ. மாணிக்கவாசகர் தமது தலைவர் பதவியை ராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து புதிய தலைவரைத் தெரிவுசெய்வதற்காக உள்ளூர் விசாரணை அதிகாரி திரு. ஜி. குமாரவேலு தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு மாணிக்கவாசகரே மீண்டும் போட்டியின்றி ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

வெள்ளி 4-12-64

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 5-00, இரவு 9-00)

காலை 6-45 உதய கீதம், 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 பக்திப் பாடல்கள், 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதம்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 குதம்ப நிகழ்ச்சி.

மாலை 6-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-45 காதல் வரம்.

இரவு 6-15 கிராம சங்கீதம், 6-45 ஞானாஞ்சலி, 7-15 வாய்பாட்டு, 7-30 நேயர் விருப்பம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சிகள், 8-15 நாடகம், 8-45 இஸ்லாமிய கீதம், 9-15 பேச்சு, 9-30 நேயர் விருப்பம், 10-15 தேர்ந்த இசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 3-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை, 6-50 வாத்திய இசை, 6-55 அருள் வாக்கு, 7-00 துதிப் பாடல்கள், 7-30 காந்தி அஞ்சலி.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப் பள்ளிகட்கு, 1-00 மாதர் நிகழ்ச்சி, 1-30 கதம்பம், 1-50 வாத்திய இசை, 2-10 உயர்தரப் பள்ளிகட்கு.

மாலை 5-15 நாகஸ்வரம் இ. அம்மையப்பன், 6-20 கிராம நிகழ்ச்சிகள், 7-30 பொங்கி வெழும் பாரதம், 7-45 பட்டுடி. எம். தியாகராசன், 9-15 இசைமாலை, 9-20 மெல்லிசை, 9-45 பலசுவை, 10-00 திரைப் பட இசை.

REGAL — JAFFNA
NOW SHOWING

World's Best Show of Shows!!
FORBIDDEN TEMPTATIONS
(Totalscope-color) (Adults only)

# விவேகானந்தசபை நாவலர், பாரதி பேச்சுப்போட்டி முடிவு

கொழும்பு, வியாழன் கொழும்பு விவேகானந்த சபையின் ஆதரவில் ஆறுமுக நாவலர் குருபூசைவிழா சென்ற ஞாயிறு காலையும் மாலையும் சபாமண்டபத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

காலை நிகழ்ச்சிகள் திரு கோ. ஆழ்வாப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. தலைமை உரையை அடுத்து அகில இலங்கை நாவலர் நினைவுப் பேச்சு வன்மைப் போட்டியின் இறுதித் தெரிவு நடைபெற்றது. இப்போட்டியில் கீழ்ப் பிரிவு, மத்திய பிரிவு, மேற் பிரிவு ஆகிய மூன்று பிரிவுகளிலும் மொத்தம் 32 மாணவர்கள் வரை பங்குபற்றினர். போட்டிக்கு மத்தியஸ்தர்களாக திரு. சி. இலக்குமணன் இலங்கை வானொலி தமிழ் நிகழ்ச்சி அதிகாரி, திரு கே. என். நடராசா, செல்வி சற்சொரூபவதி நாதன் ஆகியோர் கடமையாற்றினர்.

பேச்சுப் போட்டியைத் தொடர்ந்து மகேஸ்வர பூசை நடைபெற்றது. நூற்றுக்கதிகமான ஏழைமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. மாலை நிகழ்ச்சிகள் சபைத் தலைவர் திரு இரா. சபாநாயகம் தலைமையுரையுடன் விழா ஆரம்பமாகியது. தலைமையுரையை அடுத்து நாவலர் பாரதியார் ஆகியோரின் நினைவுப் பேச்சுப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களின் பேச்சுக்கள் இடம்பெற்றன. பேச்சுப் போட்டிகளில் மேற்பிரிவில் முதலாவதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு தங்கப் பதக்கங்களும் மற்றைய பிரிவுகளில் முதலாம் இடங்களைப்பெற்ற மாணவர்களுக்கு வெள்ளிப்பதக்கங்களும் இரண்டாம் மூன்றும் இடங்களைப்பெற்றவர்களுக்குப் புத்தகப் பரிசில்களும் பரிசு பெறாத ஏனைய மாணவர்களுக்கு உவந்களிப்பாக புத்தகப் பரிசில்களும் வழங்கப்பட்டன. பரிசில்கள் திருமதி வே. சபாநாயகம் அவர்களால் வழங்கப்பட்டது. இதையடுத்து கொழும்பு விவேகானந்த சபையின் ஆக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் அரும்பாடுபட்ட காலம் சென்ற திரு ஏ. செல்லப்பா அதிகாரி ஏ. செல்லமுத்து முன்னாள் வட்டுக்கோட்டைப் பா. உ. ஏ. கனகரத்தினம் ஆகியோரின் சேவைகளை சபையின் உபதலைவரும் வழக்கறிஞருமான திரு. எ. சோமசுந்தரம் பாராட்டி பேசி மறைந்தவர்களின் படங்களை திரை நீக்கமும் செய்துவைத்தார். இதனையடுத்து சைவமும் நாவலரும் என்னும் பொருள்பற்றி சுவாமி சச்சிதானந்த யோகியும் நாவலர் அன்றும் இன்றும் பொருள்பற்றி உடுப்பிட்டி பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரம் சொற்பொழிவாற்றினர்.

### போட்டி முடிவுகள் வருமாறு

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நினைவு பேச்சுவன்மைப் போட்டியின் இறுதித் தேர்வில் தேர்ந்தெடுக்கப்பட்டோர் விபரம்:—

#### மேற்பிரிவு

முதலாம் பரிசு: வி. வைத்திலிங்கசர்மா, அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, மேமடகொடை, கொழும்பு; இரண்டாம் பரிசு: வே. சத்தியராஜ், 178, ஞானார்த்த மாவத்தை, கொழும்பு 13; மூன்றும் பரிசு: ரா. சாவித்திரி, புனித கபேரியல் மகளிர் கல்லூரி, கரம்பன்.

#### மத்திய பிரிவு

முதலாம் பரிசு: ச. ஜெயகுமாரி, செங்குந்தா இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம்; இரண்டாம் பரிசு: பொ. சுசீலாமணி, சந்திரோதய வித்தியாசாலை, உரும்பிராய்; மூன்றும் பரிசு: ம. குணலிங்கம், அமிர்த ஆங்கில பாடசாலை, காங்கேசன் துறை.

#### கீழ்ப்பிரிவு

முதலாவது பரிசு: ந. ஜெயலட்சுமி, அரசினர் மகா வித்தியாலயம், ஏழாலை; இரண்டாம் பரிசு: சீ. கலைச் செல்வன், விவேகானந்த மகா வித்தியாலயம், கொழும்பு 13; மூன்றும் பரிசு: க. இராஜனி, கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலயம்.

பாரதியார் நினைவுப் பேச்சு வன்மைப் போட்டியில் இறுதித் தேர்வில் தேர்ந்தெடுக்கப்பட்டோர்–

#### மேற்பிரிவு

முதலாம் பரிசு: பவுல் அந்தோனி தெமட்டகொடை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை கொழும்பு; இரண்டாம் பரிசு: ஹ அப்துல் ஹமீத் தெமட்டகொடை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை கொழும்பு; மூன்றும் பரிசு: பொ. சரோஜா புனித கபேரியல் பெண்கள் கல்லூரி கரம்பன்.

#### மத்திய பிரிவு

முதலாம் பரிசு: து. பலராஜா இந்துக்கல்லூரி திருகோணமலை; இரண்டாம் பரிசு: ஆ. சீதாலட்சுமி புனித கபேரியல் பெண்கள் கல்லூரி கரம்பன்; மூன்றும் பரிசு: சி. ஆனந்தகுமார் கதிரேசன் குமார மகாவித்தியாலயம் நாவலப்பிட்டி.

#### கீழ்ப்பிரிவு

முதலாம் பரிசு: செ. சுந்தர ... வெள்ளவத்தை ... தமிழ்க் கலவன் பாடசாலை ... புரி; இரண்டாம் ...

ஸ்ரீ மனோகரா
(யாழ்ப்பாணம்) போன் 495
6-30 மட்டும்
சதி அநுசூயா

4-00—9-45 ...
SON of ZORRO

2-வது மகத்தான வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) விஜயா (மட்டக்களப்பு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜிதா (அட்டன்)

தீந்தமிழால் இறைவனைப் பாடி, தெவிட்டாத பக்தியை மூட்டி, தெய்வத்தின் நிலை அடைந்து தமிழர் உள்ளத்தில் வாழும் - பட்டினத்தார்



பிரபல பின்னணி பாடகர்
டி. எம். சௌந்தரராஜன்
எம். ஆர். ராதா
ஜெமினி சந்திரா
எஸ். ராமராவ்
டிஸ், டி. சுப்புலக்ஷ்மி
எஸ். ஆர். ஜானகி
நடிக்கும்

பட்டினத்தார்

சங்கீதம்: ஜி. ராமநாதன் — டைரக்ஷன்: கே. சோமு

# சபையில் பணமில்லை . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

விருந்து சந்தைக்குப் பணம் எடுப்பது புத்திசாலித்தனமன்று. மத்திய அரசாங்கத்திடமிருந்த கடன் எடுக்கவேண்டும்.

செல்லத்துரை- யாழ்ப்பாணநகர சந்தையின் நிலை ஒரு பெண்ணை அவமானப்படுத்தியதுபோல இருக்கிறது. மக்களின் வசதிக்காக உடனடியாகச் சந்தையைக் கட்டவேண்டும், கட்டியே தீரவேண்டும்.

ராஜகுரியர்: மக்கள் படும் அவஸ்தை ஒருபுறம், மார்க்கட் படும் அவஸ்தை மற்றொரு புறம்.

துரையப்பா: நான் மேயராக இருக்கும்போது சந்தை கட்டுவதற்கு கடன் தருவதாக மந்திரி கூறினர். நான் அதற்கான ஒழுங்குகள் செய்து வந்தபோது, 'மார்க்கட்டும்' வேண்டாம், மேயரும் வேண்டாமென்று சூழ்ச்சிசெய்து, எனது ஒப்பந்தத்தின் 'சீல்' பிழையென்று கூறினர்கள். அது எனது பிழையா? மக்களின் பணத்தை அநியாயமாக செலவழித்து பின் மார்க்கட் கட்டத் தொடங்கியுள்ளார்கள். முன்னர் வரைந்த மாதிரிப் படத்தின்படி ஏன் கட்டவில்லை?

[திரு. துரையப்பா பேசும் போது பல தடவை திரு என். டி. செல்லத்துரையும், திரு சேனியரும் குறுக்கிட்டு பேசினர்கள்.]

மேயர்: தயவுசெய்து குறுக்கிட்டு பேசவேண்டாம், அவர் பேசட்டும்.

ராஜகுரி: ஆறு மணிக்கு மேலாகிறது. விவாதத்தை விரைவில் முடியுங்கள்.

துரையப்: மாதிரிச் சந்தை கட்டுவதற்கு அரசாங்கம் கடன் தரும் என்பதைத் திடமாக கூறுகிறேன். இப்பொழுது மழைகாலம். அவசரப்படுத்தவேண்டாம். பிழையாகவும் கட்டவேண்டாம்.

அழகையா: மாதிரிச் சந்தை பற்றி பலமுறை பேசினேம். 2 லட்சம்ரூபாய் கடன் பெறமுடியாத நிலையில் சபையுள்ளது. 2 லட்சம் ரூபா செலவில் கீழ் கட்டடத்தை முதலில் கட்டலாம். அதனை வாடகைக்கு கொடுத்து அப்பணத்தில் மேல் கட்டடத்தைக் கட்டலாம். பால்கொடுத்தான் பால் கறப்பது வழக்கம். மூன்று மார்க்கட் அவசியம் என்றவர்கள் இப்பொழுது ஒரு மார்க்கட் வேலையை மீண்டும் தொடங்குவோம். அதே வேளையில் கடன் எடுப்பதற்கும் முயற்சிப்போம்.

ராஜகுரியர்: இன்ஜினியர் இல்லை. மாதிரிச் சந்தை கட்டமுடியுமா? மழையில்லாமல் கட்டடம் செலுத்த முடியுமா?

அபுசாலி: இச்சபையிலுள்ள பணத்தை மாதிரிச்சந்தைக்கு செலவழித்தால், எங்கள் வட்டார வேலைகளுக்குப் பணம் எங்கிருந்து கிடைக்கும்? ஒவ்வொரு வட்டாரத்திற்கும் குறைந்தது 15,000 ரூபாய் செலவழிக்க வேண்டியுள்ளது.

கந்தையா: அரசியல் நோய் இச்சபையில் வந்தநாள் முதல், முன்னேற்றத் திட்டங்கள் செயல்படவில்லை. பற்றாக்குறையான வரவு செலவு திட்டத்தை வைத்துக்கொண்டு சந்தை கட்டுவதற்கு எப்படி இரண்டு லட்சம் எடுக்க முடியும்? ஏன் அரசாங்கத்திடம் கடன் எடுக்கக்கூடாது? அரசாங்கத்திடம் கடன் எடுக்க முடியும் என திரு. துரையப்பா கூறுகிறர். ஏன் முயற்சி எடுக்கவில்லை?

துரையப்பா: இச்சபையில் இதே மாதிரியான பிரேரணை கொண்டுவரப்பட்டு மூன்று மாத காலம் சென்றபின் ... மார்க்கட் ... பிரேரணை கொண்டு ...

... மகா ... ராதபுரம்; மூன்றும் பரிசு: ... சந்திர... வித்தியாலயம், உரும்பிராய்.

காட்டுத்திணைக்களம்
ஏலவிற்பனை

என் 2284 - யாழ்ப்பாண அரசினர் மரக்காலையில் இருக்கும் 4 அ. 6 அங்குலத்துக்கு மேற்பட்ட 583. 8 கனஅடி கொண்ட 31 முதிரை மரங்கள் யாழ்ப்பாண மாவட்ட வனபரிபாலன அதிகாரியால் 17-12-64 காலை 10 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். முழு விபரங்களுக்கும் 4-12-64 அரசாங்கவர்த்தமானியை பார்க்கவும்.

## வரி விளம்பரம்

### தேவை

ஐரோப்பிய உல்லாசப் பிரயாணிகள் தங்கும் சிறந்த ஹோட்டல் ஒன்றுக்கு ரூம் பையன்களாகவும், வெயிட்டர்களாகவும் பயிற்சி பெறுவதற்கு ஆங்கில அறிவும் புத்தி கூர்மையும் உள்ள நல்ல வாலிபர்கள் தேவை. நல்ல வாய்ப்புகள் விண்ணப்பிக்கவும். புளு றிபன் ஹோட்டல், யாழ்ப்பாணம். 1168

### வகுப்புகள்

தெரிவுசெய்யப்பட்ட பின்வரும் பிரவேசங்களுக்கு தற்பொழுது வகுப்புகள் நடாத்தப்படுகின்றன. மத்திய குமாஸ்தர்கள் சேவை பரீட்சை, சுருக்கெழுத்து, தட்டெழுத்து, கணக்கியல், ஆங்கில / தமிழ் வர்த்தகம், சிங்களம். தங்கிப் படிக்க வசதிகள் உண்டு. யுனைட்டெட் இன்ஸ்டிடியூட், சுண்டிபடி, காவெட்டி, 107 ருக்கித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 1170

### தேவை

தற்காலிக லிகிதர் வேலைக்கு உடனடியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 30 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலரும் சொந்தக் கையெழுத்துக் கடித மூலம் தமிழ் அல்லது ஆங்கிலத்தில் 8–12-64-க்கு முன் விண்ணப்பிக்கலாம். தாங்கள் விரும்பும் சம்பளத்தைக் குறிப்பிடவும். அதிபர், ஒக்ஸன் கோனர், 5 மெயின் வீதி, யாழ்ப்பாணம். 1177

### விற்பனைக்கு

20 ஏக்கர் தென்னந்தோட்டம் பளையில் உண்டு. விபரத்துக்கு சண்முகநாதன், 56, நாவலர் ரோட், யாழ்ப்பாணம். 171

...ரப்பட வேண்டும். சபையில் பெரும்பான்மை ஆதரவு கிடைக்கும் என்ற காரணத்தால் நினைத்தபடி தீர்மானத்தை நிறைவேற்றுவது முறையல்ல. நீதியான தீர்மானத்தையே நிறைவேற்றவேண்டும்.

மேயர்- சந்தைக் கட்டடம் தற்காலிகமாகவே நிறுத்தப்பட்டது. ஆதலால் அந்தத் தீர்மானத்தின்படி நடவடிக்கை எடுத்ததாகக் கருத முடியாது. ஆதலால் சந்தைபற்றி பேசிக்கலாம். இத்தீர்மானம்பற்றி விவாதித்து முடிவு எடுக்கலாம்.

இத்தீர்மானம் வாக்குக்கு விடப்பட்டபோது 8 பேர் ஆதரவாக வாக்களித்தார்கள். மேயர் வாக்களிக்க மறுத்துவிட்டார். இருவர் வாக்களிப்பின்போது சபையில் இருக்கவில்லை. இத்தீர்மானம் நிறைவேறியது என மேயர் தெரிவித்தார்.

சமர்ப்பிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட சட்ட ஆலோசனையின் பேரில் புதிய சந்தையினது முதலாம் கட்டத்தின் கட்டிட வேலைகளை தொடரவேண்டுமென்ற பிரேரணையை திரு. கே. வி. நெய்ப்ப... கொண்டுவந்தார். இப்பிரேரணையை திரு. ... ஆமோதித்தார்.

...குரியர் - ... வைத்த ... வின்

(6-ம் பக்கம் பார்க்க)

# சி. பி. டி. சில்வா ராஜினுமா

கொழும்பு, வியா.

சபை முதல்வரும் காணி நீர்ப்பாசன மந்திரியுமான திரு. சி. பி. டி. சில்வா தமது மந்திரி பதவியிலிருந்தும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியிலிருந்தும் ராஜினுமா செய்துள்ளார். திரு. சி. பி. டி. சில்வா தமது ராஜினுமா கடிதத்தை இன்று காலை, பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவிடம் சமர்ப்பித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து விலகி தாம் எதிர்க்கட்சியில் சேரப்போவதாகவும் திரு. சி. பி. டி. சில்வா தமது ராஜினுமா கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

திரு. சி. பி. டி' சில்வா, மந்திரிப் பதவியிலிருந்தும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்தும் ராஜினுமா செய்துவிட்ட செய்தி, குறிப்பாக அரசாங்க கட்சியினரை பெரும் பரபரப்புக்குள்ளாக்கியிருப்பதுடன் ஒரு இக்கட்டான நிலையையும் தோற்றுவித்துள்ளது.

கொழும்பு, வியாழன்

வெளிநாட்டு பிரயாணத்துக்கு விதிக்கப்பட்டுள்ள தடைகள் சம்பந்தமாகவும் அதுஜரித்த சுப்ரீம் கோர்ட் வழங்கிய தீர்ப்பு சம்பந்தமாகவும் சேற்றுக் கூடிய மந்திரி சபைக் கூட்டத்தில் ஆராயப்பட்டதாகத் தெரிகிறது.

# இந்திய ஜனுதிபதிக்கு பாப்பரசர் கௌரவம்

## வத்திக்கானின் அதி உயர்ந்த விருது வழங்கினுர்

புதுடில்லி, டிச. 3

பம்பாய் வந்திருக்கும் பாப்பரசர் 6-வது பால் ஜனுதிபதி ராதாகிருஷ்ணனைச் சந்தித்து வத்திக்கானின் மிக உயரிய விருதை அளித்துக் கௌரவித்தார். டில்லியிலிருந்து வந்த ஜனுதிபதி ராதாகிருஷ்ணனைச் சந்திப்பதற்காக பாப்பரசர் இன்று மத்தியானம் கவர்னர் மாளிகையான ராஜ் பவனுக்கு வந்தபோது வாசலில் கவர்னர் திரு. செரியன் அவரை வரவேற்று ஜனுதிபதியிடம் அழைத்துச் சென்றுர். இருவரும் கைகுலுக்கி பரஸ்பரம் வாழ்த்துத் தெரிவித்துக் கொண்டனர்.

ஜனுதிபதி ராதாகிருஷ்ணன் பாப்பரசரை வரவேற்றுப் பேசுகையில் வரலாற்றிலேயே ஒரு பாப்பாண்டவர் இங்கு முதல் தடவையாக வந்திருப்பது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது என்றுர். ரோமாபுரியில் நடைபெறும் திருச்சபைக் கூட்டத்தை இந்தியா சிரத்தையுடன் கவனித்து வருவதாயும் டாக்டர் ராதாகிருஷ்ணன் குறிப்பிட்டார்.

பாப்பரசர் தமக்களிக்கப்பட்ட சிறப்பான வரவேற்பிற்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

பின் ஒரு நாட்டின் தலைவருக்கு வழங்கப்படும் ஆக உயர்ந்த வத்திக்கான் விருதை பாப்பரசர் ஜனுதிபதி ராதாகிருஷ்ணனுக்கு அளித்தார். மூன்று தங்கப்பதக்கங்களையும், இரண்டு வெள்ளி மெழுகுதிரி விளக்குகளையும், தமது கையெழுத்திட்ட படம் ஒன்றையும், இரு விவிலிய நூல்களையும் பாப்பரசர் ஜனுதிபதிக்கு அளித்தார்.

பாப்பரசரை இன்று ஏராளமானேர் தரிசித்து ஏராளமான அன்பளிப்புகளை வழங்கினர்.

கிறிஸ்தவர்களல்லாதோர் அடங்கிய ஒரு கூட்டத்தில் பாப்பரசர் பேசியபோது, உலகம் ஒன்றைச் சமைக்கும் முயற்சியில் எல்லா மதங்களும் இணைந்து பாடுபடவேண்டும் எனக் குறிப்பிட்டார். ஆசியாக் கண்டத்துக்கு பம்பாய் ஒரு அடையாளச்சின்னமாய் விளங்குவதாயும் அவர் குறிப்பிட்டார்.

ஜனுதிபதி ராதாகிருஷ்ணன் பின் பாப்பாண்டவரின் மாளிகைக்குச் சென்று தம் மரியாதையைத் தெரிவித்துக் கொண்டார்.

## மாணவிக்கு முதற்பரிசு

யாழ்ப்பாணம், வியா.

அகில இலங்கை மாணவர்க்கிடையில் கொழும்பு விவேகானந்தசபையினரால் சென்ற மாதம் 29-ந் திகதி நடத்தப்பட்ட ஆறுமுகநாவலர் பேச்சு வன்மைப் போட்டியில் கீழ்ப்பிரிவில் கலந்துகொண்ட ஏழாலை அரசினர் மகாவித்தியாலய மாணவி செல்வி கா. ஜெயலட்சுமி முதற்பரிசைப் பெற்றுள்ளார்.

## ஸ்ரீமா அரசாங்கம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரணையை எதிர்த்து ஐக்கிய தேசியகட்சியினர், தமிழரசுக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, ஜாதிக விமுக்தி பெரமுனை, புரட்சிவாத சமசமாஜிஸ்டுகள், சி. பி. டி' சில்வா கோஷ்டியினர் வாக்களித்தனர். அரசாங்க கட்சியைச் சேர்ந்த டி. ஈ. திலகரத்ன, ஜே. எச். டி. டி. சில்வா, லக்ஷ்மன் டி. சில்வா, சர் ராசிக் பரீத், எஸ். குணவீர, எஸ். பி லெனுவ, டி. பி விக்கிரம விஜயசிங்கா, எட்மண்ட் விஜயசூரிய, அல்பேட் சில்வா, இந்திரசேன டி சொய்சா ஆகிய பதின் மூன்று அங்கத்தினர்களும் எதிர்த்து வாக்களித்தனர். யாழ்ப்பாணம் எம். பி. அல்பிரட் துரையப்பா வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. தமிழரசு கட்சியைச் சேர்ந்த சகல எம். பிக்களும் சபையில் சமுகமளித்திருந்தனர்.

## பொலிசார் தலையீடு

அரசாங்கம் வீழ்ச்சியடைந்ததும் பார்லிமெண்டுக்கு வெளியில் அரசாங்கத்துக்கு ஆதரவானவர்களுக்கும் எதிர் தரப்பினருக்குமிடையே ஏற்படவிருந்த மோதலை பொலிசார் தலையிட்டு தவிர்த்தனர்.

திரு. சி. பி. டி. சில்வா, திரு. மகாநாமசமரவீரா பின் தொடர எதிர்க்கட்சியினர் ஆசனத்தில் போய் அமர்ந்தார். ஒரு சந்தர்ப்பத்தில் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவுக்கும் லக்ஷ்மன் டி. சில்வாவுக்குமிடையே காரசாரமான வாக்குவாதம் ஏற்பட்டது. சபாநாயகர் குறுக்கிட்டு இதனை சமாளித்து வைத்தார்.

திரு ஆர். ஜி. சேனநாயக்காவும், கல்முனை எம். பி. திரு. அகமட்டும் அரசாங்கத்தை ஆதரித்து வாக்களித்தனர்.

## மணிஓடர்கள் எங்கே?

சாவகச்சேரி, வியாழன்

சரசாலையைச் சேர்ந்த வே. அருணம்பலம் என்பவர் சாவகச்சேரி தபாலகந்தோரில் 17-12-63-ல் எடுத்த 600 ரூபா மணிஓட்டரையும் அதேதிகதியில் சரசாலை உபதபாலகந்தோரில் எடுத்த 253 ரூபா 23 சத மணி ஓடரையும் கொழும்பு 288 யூனியன் பிளேசில் உள்ள இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் செக்கியூரிட்டீஸ் மனேஜருக்கு பதிவுத் தபாலில் அனுப்பியிருந்தார்.

ஒருவருடம் ஆகியும் இதுவரை அதுஉரியவருக்குக் கிடைக்கவில்லையென்றும் இதுபற்றி போஸ்ட்மாஸ்டர் ஜெனரலுக்கு புகார் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

## வருடாந்த விருந்து

சாவகச்சேரி, வியா.

கெருடாவில் சரஸ்வதி வித்தியாசாலை ஆசிரியர்களின் வருடாந்த இராவிருந்து வைபவம் நேற்றிரவு வித்தியாசாலையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக திரு. வ. ந. நவரத்தினம் எம். பி. கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினுர்.

## வருடத்துக்கு இரண்டு டயர்கள்

கொழும்பு, செவ்.

கார், லொறிச் சொந்தக்காரர்களுக்கு வருடமொன்றுக்கு இரண்டு டயர்கள் பெறக்கூடிய பெர்மிட் வழங்கப்படும். சகல மோட்டார் வாகன சொந்தக்காரர்களும் நியாயமான விலையில் டயர்களை பெறும்பொருட்டு இவ்விதம் வழங்குவதென நேற்றுக்கூடிய மந்திரிசபைக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது. அடுத்த வருடம் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து இது அமுலாகும்.

## எம். பி. யின் கோரிக்கை

கொழும்பு, வியாழன்

புதைபொருள் ஆராய்ச்சி இலாகா கமிஷனர் டாக்டர் சி. ஈ. குடகும்புரவுக்கெதிராகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பற்றி விசாரணை நடத்துமுகமாக பொது விசாரணைச்சபையொன்று நியமிக்கப்படவேண்டுமென கல்வாறு எம். பி. திரு. லயனல் குணசேகர சமூக, கலாசார விவகார மந்திரி திரு. டி. எஸ். குணசேகரவைக் கோரியுள்ளார்.

பௌத்த மதத்துக்கு அகௌரவமான இடங்களை அளிக்கும் வகையில் புதைபொருள் ஆராய்ச்சி இலாகாவின் நிர்வாகத்தை திருத்தி அமைக்குமாறும் எம். பி. மந்திரியைக் கேட்டுள்ளார்.

## சபையில் பண...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

போகவில்லை. இன்று அரசாங்கம் பெரும்பான்மையாக இருந்து அநீதியான தீர்மானங்களை நிறைவேற்றுவதாகக் கூறுவோர் இச்சபையில் பெரும்பான்மைப் பலத்தால் இத்தீர்மானத்தை நிறைவேற்றுவது முறையா? நேர்மையைக் கடைப்பிடிக்கும் கட்சியைச் சேர்ந்தவர்கள் இங்கு நேர்மைக்கு மாருக நடக்கிறுர்கள்.

அபுசாலி- இன்று மேயர் நடந்துகொண்டது அகில இலங்கைக்கும் ஒரு எடுத்துக்காட்டு. இங்கு கடமையாற்றிய மேயர்கள் இவரைப்போல் தைரியமாக இருந்ததில்லை.

சந்தையா- மாநகரசபை சரித்திரத்தில் மேயர் அவரது கட்சிக்கு எதிராக அபிப்பிராயம் தெரிவித்தது இதுவே முதல்தடவை. அவரது கட்சியினர் மாறுபட்டிருந்தபோதிலும் மேயர் நீதியாக நடந்துளளார்.

துரையப்பா- சபையில் பணமும், சரியான படமும், இன்ஜினியரும் இருந்தால் நாளை காலையிலேயேகட்டடவேலையை ஆரம்பியுங்கள். அதற்கு நான் எதிராக நிற்க மாட்டேன். பணமுமில்லாமல் படமுமில்லாமல் பெரும்பான்மை பலத்தால் தீர்மானத்தைநிறைவேற்றுவதால் பயனென்ன?

மேயர்- வரவுசெலவுத் திட்டத்தில் ஒரு லட்சம் ரூபா பற்றுக் குறை இருந்தபோது நான் சந்தைக்காக இரண்டரை லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது. கட்டடத்தைத்தொட்ருவதற்கு சரியான படமில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்பொழுதுள்ளபடத்தின்படி சந்தையைக் கட்டினுல் யாழ்ப்பாணத்திற்கு ஏற்ற சிறந்த சந்தையாக அமையாது என்பதே என் அபிப்பிராயம்.

இத்தீர்மானம் வாக்குக்கு விடப்பட்டபோது எட்டுப்போ ஆதரவாக வாக்களித்ததால் தீர்மானம் நிறைவேறியது. வாக்களிப்பு நடைபெற்றபோது இருவர் சபையில் இருக்கவில்லை. இத்தீர்மானத்திற்கு மேயர் வாக்களிக்க மறுத்துவிட்டார்

## எம். பி. கேட்கவிருக்கும் கேள்விகள்

யாழ்ப்பாணம், வியா.

"வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடந்த இரு வருடங்களுக்கு மேலாக டெலிபோன் வசதியின்றி இத்தாமதக்காத்திருக்கும் உபதபால் கந்தோர்களின் எண்ணிக்கை எவ்வளவு?" என ஜனப்பிரதிநிதிகள் சபையில் வவுனியா எம். பி., திரு டீ. சிவசிதம்பரம் தபால் தந்தி தொடர்பு மந்திரியைக் கேட்கவிருக்கிறுர்.

"இந்த உபதபால் கந்தோர்களுக்கு நடப்பு நிதி ஆண்டில் டெலிபோன் தொடர்பு வசதியளிக்க சம்பந்தப்பட்ட மந்திரி ஏற்பாடுகள் செய்துள்ளாரா?" எனவும் திரு. சிவசிதம்பரம் கேட்பார்.

திரு. சிவசிதம்பரம் கல்வி மந்திரியிடம் கேட்கவிருக்கும் கேள்விவருமாறு:

வவுனியாவிலுள்ள மூன்று தமிழ் மகா வித்தியாலயங்களிலும், இரு சிங்கள மகா வித்தியாலயங்களிலும் ஒரு முஸ்லிம் மகாவித்தியாலயத்திலும் உடற்பயிற்சி ஆசிரியர்களும் சங்கீத ஆசிரியர்களும், விவசாய பயிற்சி ஆசிரியர்களும் இல்லை என்பதை மந்திரி அறிவாரா? இப்பிரச்னையைத் தீர்க்க மந்திரி எவ்வித நடவடிக்கை மேறகொள்ள உத்தேசித்திருக்கிறுர்?

## டி. ஆர். சி. காரர்கள் முதலில் அனுப்பப்படுவர்

கொழும்பு, வியா.

சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தத்தின் பிரகாரம் ஐந்தேகால் லட்சம் பேர்கள் இந்தியாவுக்கு அனுப்பப்படுமுன்னர் தற்காலிக வாசபர்மிட் வைத்திருப்பவர்களை அனுப்பவேண்டும் என்று நேற்று நடைபெற்ற மந்திரிசபை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இலங்கை பிரஜைகளாவதற்கு விண்ணப்பம் செய்துள்ள இந்திய வம்சாவளியினரில், பிரஜையாவதற்கு தகுதியுடையவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு அவர்களுக்கு பிரஜா உரிமை வழங்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் மந்திரிசபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## டயஸ் நடவடிக்கை விசாரிக்க கமிட்டி?

கொழும்பு, வியாழன்

வெளிவிவகார பாதுகாப்பு அமைச்சின் நிரந்தர காரியதரிசி திரு. என். கியூ. டயசின் நடவடிக்கைகள்பற்றி விசாரணை செய்ய பாராளுமன்ற தெரிவு கமிட்டி ஒன்றை நியமிக்கவேண்டுமென்று விரைவில் எதிர்க்கட்சியினர் பாராளுமன்றத்தில் ஒரு தீர்மானம் கொண்டுவருவார்கள் என நேற்று நடைபெற்ற பாராளுமன்றத்தில் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கூறினுர்.



### மனேஜர் தேவை

யூனியன் கல்லூரி பொருள் விநியோக சங்கத்துக்கு ஒரு மனேஜர் தேவை.

**தராதரங்கள்**

1. குறைந்தது தமிழ்-ஆங்கிலத்தில் J. S. C. வகுப்புச் சித்தியடைந்தவராகவும், 25-45 வயதுக்குட்பட்டவராகவும், வியாபார அனுபவமுடையவராகவும் இருக்க வேண்டும்.
2. ரொக்கப்பிணை 1000 ரூபா.
3. சம்பளம் 100 ரூபா.

விரும்புவோர் 10-12-64 க்கு முன் கீழ்க்காணும் விலாசத்துக்கு மனுப்பணவும்.

காரியதரிசி.

சி. இராசரத்தினம்,
தலைவர்.

யூனியன் கல்லூரி பொருள்
விநியோக சங்கம்"
தெல்லிப்பழை.
5-12-64

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**



இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் வாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் இலக்கத்தில் அச்சகத்தில் 1964-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 4-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.